| D–7096 |
|---|

| Sub. Code |
|---|
| 10711 |

DISTANCE EDUCATION

B.Lit. (Tamil) DEGREE EXAMINATION, DECEMBER 2022.

First Semester

இக்கால இலக்கியம்

(CBCS 2018 – 19 Academic Year Onwards)

Time : Three hours                    Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

1. பாரதியின் முதல் கவிதை நூல் எவ்வாண்டில் வெளியானது?

2. பாரதிதாசன்–குறிப்பு வரைக.

3. கண்ணதாசன் எச்சூழலில் 'மாங்கனி' குறுங்காவியத்தை எழுதினார்?

4. கவிஞர் மீராவின் இயற்பெயரைக் குறிப்பிடுக.

5. 'சுகி' என்னும் இதழ் எம்மொழியில் வெளிவந்தது?

6. 'இன்னொரு காந்திக்காக' என்ற நாடகத்தின் தலைமை மாந்தர் யார்?

7. 'மு.வ.வின் செல்லப்பிள்ளை' என அழைக்கப்படும் தமிழறிஞர்?

8. 'காப்பியப் பார்வை' என்னும் நூல் எக்காப்பியத்தை ஆராய்ந்துரைக்கிறது?

9. 'மங்கையர்கரசியின் காதல்' சிறுகதைத் தொகுப்பில் எத்தனைக் கதைகள் உள்ளன?

10. 'மாறுதடம்' சிறுகதையின் ஆசிரியரைக் குறிப்பிடுக.

பகுதி ஆ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கு ஒருபக்க அளவில் விடை தருக.

11. (அ) குயிலின் முற்பிறப்புக் கதையைக் குயில்பாட்டின் வழி விளக்குக.

(அல்லது)

(ஆ) தமிழ் உணவு குறித்துப் பாரதிதாசன் உரைப்பனவற்றை எழுதுக.

12. (அ) அடலேறுவின் குணங்களைக் கண்ணதாசன் எங்ஙனம் விவரிக்கிறார்?

(அல்லது)

(ஆ) மேயர் மகன் பேசும் உலக உண்மைகளை மீரா எங்ஙனம் கவிப் பாடியுள்ளார்?

13. (அ) 'நீ எழுத மறுக்கும் எனதழகு' பேசும் உள்ளடக்கச் செய்திகளைச் சுட்டியுரைக்க.

(அல்லது)

(ஆ) வறுமை குறித்துத் தங்கம் மூர்த்தி கவிப்பாடுமாற்றை விரித்துரைக்க.

14. (அ) 'ஹைக்கூ' இலக்கிய வடிவத்தைச் சுட்டியுரைக்க.

(அல்லது)

(ஆ) 'காப்பியத் தூய்மை' குறித்து வ.சுப. மாணிக்கனார் கூறுவனவற்றை எழுதுக.

15. (அ) சிறுகதையின் இலக்கணத்தைச் சான்றுடன் விளக்குக.

(அல்லது)

(ஆ) 'திருஷ்டிப் பரிகாரம்' தலைப்புப் பொருத்தத்தை விளக்கி வரைக.

பகுதி இ — (3 × 10 = 30 மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுள் மூன்றனுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. குயில்பாட்டில் பேசப்படும் உலகியல் கருத்துக்களைத் தொகுத்துரைக்க.

17. தேனம்மை லட்சுமணன் கவிதைகளில் வெளிப்படும் பெண்ணியக் கருத்துக்களை எழுதுக.

18. கம்பராமாயணச் சிறப்புகளை வ.சுப. மாணிக்கனார் கூற்றின் வழிக் கட்டுரைக்க.

19. 'தமிழச்சி' சிறுகதையின் வழி ஜெயகாந்தனின் உத்திகளைச் சான்றுகளுடன் விவரிக்க.

20. இராஜம் கிருஷ்ணன் பேசும் பகுத்தறிவுக் கருத்துகளைச் சான்றுகளுடன் விளக்குக.

| D–7097 |
|---|

| Sub. Code |
|---|
| **10712** |

DISTANCE EDUCATION

B.Lit. (Tamil) DEGREE EXAMINATION, DECEMBER 2022.

First Semester

இலக்கணம் – நன்னூல் – எழுத்து

(CBCS 2018 – 19 Academic Year Onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 2 = 20 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

1. பொதுப்பாயிரத்தின் இலக்கணம் யாது?

2. சிறப்புப் பாயிரம் எழுதும் தகுதி பெற்றோரைக் குறிப்பிடுக.

3. நூல் எழுதும் முறை குறித்து எழுதுக.

4. எழுத்து எத்தனை வகைப்படும்?

5. ஐகார, ஔகாரத்தின் இன எழுத்துக்கள் யாவை?

6. பதம் எத்தனை வகைப்படும்?

7. தமிழுக்குரிய சிறப்பு எழுத்துக்கள் யாவை?

8. 'நாடுரி'- பிரித்து விளக்குக.

9. ஆ, மா, கோ - புணர்ச்சியில் பெறும் சாரியை யாது?

10. 'அத்தின் அகரம் அகரமுனை இல்லை' — விளக்குக.

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) நன்னூல் சிறப்புப் பாயிரம் உணர்த்தும் செய்திகளைக் குறிப்பிடுக.

(அல்லது)

(ஆ) ஒத்து, படலம் குறித்து எழுதுக.

12. (அ) நூலுக்குப் பெயரிடும் முறையைச் சான்றுடன் விளக்குக.

(அல்லது)

(ஆ) அளபெடை குறித்து விரிவாக எழுதுக.

13. (அ) போலி என்றால் என்ன? சான்றுகளுடன் விளக்குக.

(அல்லது)

(ஆ) ஓரெழுத்து ஒரு மொழிகளைக் குறிப்பிடுக.

14. (அ) செய்யுள் விகாரம் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) எகர வினா, சுட்டுப் பெயர்ப் புணர்ச்சியை விவரிக்க.

15. (அ) குற்றியலுகரப் புணர்ச்சியை விளக்கி வரைக.

(அல்லது)

(ஆ) இரண்டாம் வேற்றுமைப் புணர்ச்சியின் சிறப்பு விதியைக் கூறுக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. ஆசிரியர் ஆகாதவரின் தன்மையை விவரித்து எழுதுக.

17. சார்பெழுத்துக்களின் வகைகளை விளக்கி வரைக.

18. வேற்றுமை, அல்வழிப் புணர்ச்சியைக் கட்டுரை வடிவில் எழுதுக.

19. ணகர, னகர ஈற்றுப் புணர்ச்சிகள் குறித்து எழுதுக.

20. நுமது கல்லூரியில் நடைபெறும் கம்பன் விழாவிற்கு வரவேற்பிதழ் ஒன்றினை எழுதுக.

———————

| D–7098 |
|---|

| Sub. Code |
|---|
| 10713 |

DISTANCE EDUCATION

B.Lit. (Tamil) DEGREE EXAMINATION, DECEMBER 2022.

First Semester

தமிழக வரலாறு

(CBCS 2018 – 19 Academic Year Onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 2 = 20 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

1. பாலை நிலத்திற்கான நில இயல்புகளைக் குறிப்பிடுக.

2. செப்பேடுகள் – சிறுகுறிப்பு வரைக.

3. 'இளம்பாலாசிரியர்' என்று யாரைக் குறிப்பிடுவர்?

4. களப்பிரர் காலத்தில் வச்சிரநந்தி உருவாக்கிய சங்கம் யாது?

5. பல்லவர் காலத்தில் அரசு நிலங்கள் எப்பெயரில் வழங்கப்பட்டன?

6. 'சோழகங்கம்' என்னும் ஏரியை உருவாக்கிய சோழன் யார்?

7. யாருடைய படையெடுப்பால் பாண்டியநாடு சீர்குலைந்தது?

8. மதுரை–திருச்சியை இணைக்கும் மங்கம்மாள் சாலையை அமைத்தவர்?

9. 'சுயராஜ்யம் எனது பிறப்புரிமை' என முழங்கியவர் யார்?

10. 'திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்' என்னும் நூலை எழுதியவர்?

பகுதி ஆ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) தமிழக வரலாற்றை அறிய உதவும் சான்றுகளைப் பற்றி எழுதுக.

(அல்லது)

(ஆ) ஐந்திணைப் பாகுபாடுகள் குறித்து விளக்கி வரைக.

12. (அ) களப்பிரர்களின் வரலாற்றுப் பின்னணிகளை வரைக.

(அல்லது)

(ஆ) பல்லவர்களின் வீழ்ச்சிக்கான காரணங்களைத் தொகுத்துரைக்க.

13. (அ) திரும்புறம்பியம் போர் பற்றிய வரலாற்றைப் புலப்படுத்துக.

(அல்லது)

(ஆ) சோழராட்சியின் ஊராட்சி முறையைச் சான்றுடன் விளக்குக.

14. (அ) பாண்டியர் வீழ்ச்சியும் இசுலாமியர் எழுச்சியும் குறித்துக் கட்டுரைக்க.

(அல்லது)

(ஆ) திருமலை நாயக்கரின் ஆட்சிமுறைகளைச் சான்று காட்டி விவரிக்க.

15. (அ) சுதந்திரப் போராட்டத்தில் பங்கேற்ற பூலித்தேவன் வரலாற்றை எழுதுக.

(அல்லது)

(ஆ) வ.உ.சி.யின் தேசப் பற்றை நும் பாடப் பகுதியால் பாராட்டியுரைக்க.

பகுதி இ — (3 × 10 = 30 மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுள் மூன்றனுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. சங்க காலப் பெண்டீர் நிலையை இலக்கியங்கள் வழி எடுத்துரைக்க.

17. களப்பிரர் ஆட்சியால் தமிழகம் பெற்ற நன்மைகளைக் கட்டுரைக்க.

18. சோழர்களின் கடல் கடந்த வெற்றிகளைச் சான்றுகளுடன் விளக்குக.

19. நாயக்கர் காலப் பாளையப்பட்டு ஆட்சி முறையினை விரித்துரைக்க.

20. வேதாரண்யம் உப்பு சத்தியாகிரக வரலாற்றை விளக்கி எழுதுக.

| D–7099 |
|---|

| Sub. Code |
|---|
| 10714 |

DISTANCE EDUCATION

B.Lit. DEGREE EXAMINATION, DECEMBER 2022.

First Semester

தமிழ்

சிற்றிலக்கியம்

(CBCS 2018 – 19 Academic Year Onwards)

Time : Three hours                Maximum : 75 marks

பகுதி அ — (10 × 2 = 20 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

1. பன்னிரு திருமுறைகளில் கல்லாடம் எத்திருமுறையில் இடம்பெற்றுள்ளது?

2. நந்திவர்மன் வீரம் எத்தகையது?

3. தொல்காப்பியப் புறத்துறை சார்ந்த கலம்பக உறுப்புகள் யாவை?

4. உலகவாழ்வின் மயக்கத்தை நீக்குபவன் என்று பெரியாழ்வார் யாரைக் குறிப்பிடுகின்றார்?

5. வேதவிழுப்பொருளை நவின்றவர் யார்?

6. தமிழில் முதன்முதலில் எழுந்த பரணி நூல் எது?

7. செயங்கொண்டார் இயற்றிய மூன்று நூல்களைக் கூறுக.

8. குமரகுருபரர் இயற்றிய நூல்கள் நான்கின் பெயரைக் குறிப்பிடுக.

9. ஒட்டக்கூத்தர் எங்குப் பிறந்தார்?

10. கலிங்கத்துப்பரணியின் சோழ அரசனின் பிறந்தநாளைக் குறிப்பிடுக?

பகுதி ஆ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) நந்திவர்மனின் கொடை குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) பாண் என்ற உறுப்பில் நந்திவர்மனின் சிறப்பினை விளக்குக.

12. (அ) பெரியாழ்வார் பாடிய தலங்கள் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) தாயாகிய பெரியாழ்வார் கூறும் கருத்தினை விளக்கி வரைக.

13. (அ) நந்தகோபருக்குத் திருக்குமரன் பிறந்ததைக் கேள்விப்பட்ட மக்களின் நிலையை எழுதுக.

(அல்லது)

(ஆ) மறவர்கள் காளிக்குத் தங்களைப் பலியிட்டுக் கொள்ளும் நிகழ்ச்சியை விவரிக்க.

14. (அ) பேய்களின் செயல்பாடு பற்றி விளக்கி வரைக.

(அல்லது)

(ஆ) கடை திறப்பு மகளிரின் செயல்களுள் இரண்டினை விவரிக்க.

15. (அ) மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் சுட்டும் அகப் புற மரபுகளை விவரிக்க.

(அல்லது)

(ஆ) தலைவனைக் கண்ட ஏழு பருவ மகளிரின் காதல் செயல்களை எழுதுக.

பகுதி இ — (3 × 10 = 30 மதிப்பெண்கள்)

பின்வரும் மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. கலம்பகம் இலக்கியத்தைச் சான்றுடன் விளக்குக.

17. திருப்பல்லாண்டில் பெரியாழ்வாரின் பக்தித் திறத்தைக் கட்டுரைக்க.

18. கலிங்கப்போர் பற்றிக் கூறும் பகுதியினை விவரிக்க.

19. மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் பேசும் தமிழின் சிறப்புகளைப் புலப்படுத்துக.

20. குலோத்துங்கச் சோழனுலாவில் கூறப்படும் மன்னனின் மாண்புகளைச் கட்டுரைக்க.

———————

| D–7100 |
|---|

| Sub. Code |
|---|
| 10721 |

DISTANCE EDUCATION

B.Lit. (Tamil) DEGREE EXAMINATION, DECEMBER 2022.

Second Semester

அற இலக்கியம்

(CBCS 2018 – 19 Academic Year Onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

1. திருக்குறள் – பெயர்க்காரணம் தருக.

2. வள்ளுவரின் ஊன்றுகோலாய் அமைவது எது?

3. செல்வத்துள் சிறந்த செல்வமாக வள்ளுவம் எதனைக் குறிப்பிடுகிறது?

4. 'வேளாண் வேதம்' எனப் போற்றப்படும் அற இலக்கியம் யாது?

5. தவப்பயன் பெறாதவர்களின் நிலை எத்தன்மையது?

6. மனிதனுக்கு உயர் பதவி எது கொடுப்பதாக நாலடியார் கூறுகிறது?

7. பழமொழி நானூறு – ஆசிரியர் குறிப்பு வரைக.

8. ஆற்றுணவு வேண்டாம் – யாருக்கு?

9. பன்னிரு திருமுறைகளில் 'திருமந்திரம்' பெறுமிடம் யாது?

10. நீதிநெறி விளக்கத்தில் உள்ள செய்யுட்களின் எண்ணிக்கை?

பகுதி ஆ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கு <u>ஒரு பக்க அளவில்</u> விடை தருக.

11. (அ) திருக்குறள் நூல் பகுப்பும் அமைப்பும் குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) மானம் உடையாரின் செயல்களை வள்ளுவர் பாடுமாற்றை எழுதுக.

12. (அ) பெருமையுடையாரின் பண்புகளை வள்ளுவர் வழி விவரிக்க.

(அல்லது)

(ஆ) பண்பற்றவர்களை வள்ளுவர் எங்ஙனம் கடிந்துரைக்கிறார்?

13. (அ) நாலடியார் உரைக்கும் அறன் வலியுறுத்தல் கருத்துக்களை விரித்துரைக்க.

(அல்லது)

(ஆ) தானம், தவம் இவற்றினால் வரும் மேன்மைகளை நாலடியார் வழி விளக்குக.

14. (அ) கல்வியின் சிறப்புகளைப் பழமொழி நானூறு கூறுமாற்றை எழுதுக.

(அல்லது)

(ஆ) சான்றோரின் கடமைகளை முன்றுறையரையனார் பாடுமாற்றை விவரிக்க.

15. (அ) யாக்கை நிலையாமை குறித்துத் திருமூலர் கருத்துக்களைக் கட்டுரைக்க.

(அல்லது)

(ஆ) கற்றோர்க்குரிய தகுதிகளாகக் குமரகுருபரர் கூறுவனவற்றை விவரிக்க.

பகுதி இ — (3 × 10 = 30 மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுள் மூன்றனுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. வள்ளுவரின் வாழ்வியல் சிந்தனைகளை நும் பாடப் பகுதியால் விவரிக்க.

17. நாலடியார் பேசும் பிறர்மனை நயவாமை கருத்துக்களைத் தொகுத்துரைக்க.

18. பழமொழி நானூற்று வழி அறியலாகும் அறநெறிகளை எடுத்துரைக்க.

19. இறந்தாரின் சுற்றத்தார் மேற்கொள்ளும் செயற்பாடுகளைத் திருமந்திரம் வழி விவரிக்க.

20. நீதியொழுகா மாந்தர் நிலைபாடுகளைப் பற்றிக் கட்டுரைக்க.

———————

| D – 7101 |
|---|

| Sub. Code |
|---|
| 10722 |

DISTANCE EDUCATION

B.Lit. (Tamil) DEGREE EXAMINATION,
DECEMBER 2022

Second Semester

இலக்கணம் – நன்னூல் – சொல்

(CBCS 2018 – 19 Academic Year Onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 2 = 20 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடையளி.

1. நன்னூல் கூறும் திணை வகைகளை எழுதுக.

2. திரிசொல் என்றால் என்ன?

3. தெரிநிலை வினையின் இலக்கணத்தைக் குறிப்பிடுக.

4. வினைகொண்டு முடியும் முற்றுகள் எவை?

5. ஒன்றொழி பொதுச்சொல் யாவை?

6. அடுக்குத் தொடர் குறித்து எழுதுக.

7. உரையசைப் பொருளுக்குரிய இடைச்சொல் யாது?

8. 'கொல்' என்னும் இடைச்சொல் எவ்வெவ்பொருள்களை உணர்த்தும்?

9. ஓரறிவு உயிர்கள் யாவை?

10. தும்பி, வண்டு போன்றவை எத்தனை அறிவுடையன?

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடையளி.

11. (அ) மூவகை மொழிகளைச் சான்றுகளுடன் விளக்குக.

(அல்லது)

(ஆ) இரண்டாம் வேற்றுமைக்குரிய இலக்கணத்தைச் சான்றுடன் விளக்குக.

12. (அ) பெயரெச்சத்தின் இலக்கணத்தைச் சான்றின்வழி நிறுவுக.

(அல்லது)

(ஆ) உயர்திணை, அஃறிணை வினைமுற்றுகளை விளக்குக.

13. (அ) தொகாநிலைத் தொடர்களைச் சான்றுடன் நிறுவுக.

(அல்லது)

(ஆ) அறுவகை வினாக்களைச் சான்றுடன் விவரிக்க.

14. (அ) ஓகார இடைச்சொல் உணர்த்தும் பொருள்கள் எவை?

(அல்லது)

(ஆ) முன்னிலை அசைச்சொற்கள் யாவை?

15. (அ) உரிச்சொல்லின் பொதுவிலக்கணத்தைப் புலப்படுத்துக.

(அல்லது)

(ஆ) உயிரல்லாப் பொருள்களின் குணப்பண்புகளை விளக்குக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடையளி.

16. நன்னூல் பேசும் வழக்குகளின் வகைகளைச் சான்றுடன் புலப்படுத்துக.

17. வினைமுற்றின் இலக்கணம் கூறி அதன் பாகுபாடுகளைப் பட்டியலிடுக.

18. அறுவகைத் தொகைகளைச் சான்றுகள் தந்து விவரித்தெழுதுக.

19. இடையியல் விளக்கும் செய்திகளைத் தொகுத்தெழுதுக.

20. நன்னூலாரின் உயிர்பாகுபாட்டு வகைகளை விவரித்தெழுதுக.

| D–7102 |
|---|

| Sub. Code |
|---|
| 10723 |

DISTANCE EDUCATION

B.Lit. (Tamil) DEGREE EXAMINATION, DECEMBER 2022.

Second Semester

தமிழ்மொழி வரலாறு

(CBCS 2018 – 19 Academic Year Onwards)

Time : Three hours　　　　Maximum : 75 marks

பகுதி அ — (10 × 2 = 20 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

1. எக்குகை கல்வெட்டில், 'இதாதாவெ' என்னும் குறிப்புக் காணப்படுகிறது?

2. தொல்காப்பியர் குறிப்பிடும் சார்பெழுத்துக்களின் எண்ணிக்கை?

3. வீரசோழியம் குறிப்பிடும் மொழி இறுதி உயிரெழுத்துக்கள் எவை?

4. பேச்சுவழக்கில் 'இகர, உகர' மாற்றமடைவதற்குச் சான்றுகள் தருக.

5. Thermometer என்னும் அறிவியல் சொல்லை மொழிபெயர்க்க.

6. மொழிபெயர்ப்பில் பங்குபெறும் மொழிகளை எங்ஙனம் குறிப்பிடுவர்?

7. கலைச்சொல்லாக்கம் – குறிப்பு வரைக.

8. 'சாசனச் செய்யுள் மஞ்சரி' என்னும் நூலின் ஆசிரியர்?

9. 'மலாடு' என்ற ஊர்ப்பெயர் தற்காலத்தில் எப்பெயரில் வழங்கப்பெறுகிறது?

10. தமிழில் துணை எழுத்துக்களைச் சீர்த்திருத்திய அறிஞர்?

பகுதி ஆ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கு ஒருபக்க அளவில் விடை தருக.

11. (அ) அகர எழுத்து முறைகளைச் சான்றுகளுடன் விளக்குக.

(அல்லது)

(ஆ) தமிழகக் கல்வெட்டுகளில் காணப்படும் எழுத்துமுறைகளைச் சுட்டுக.

12. (அ) தொல்காப்பியர் உரைக்கும் மூன்று சிறப்பொலிகள் பற்றி விவரிக்க.

(அல்லது)

(ஆ) தென்திராவிட மொழிகளின் சிறப்பியல்புகளைத் தொகுத்துரைக்க.

13. (அ) பெயர்ப் பதிலி விகுதிகளைச் சான்றுகள் காட்டி விளக்குக.

(அல்லது)

(ஆ) தமிழ் இலக்கியங்களில் பிறமொழிச் சொற்களில் ஆதிக்கம் குறித்து எழுதுக.

14. (அ) வடமொழிச் சொற்களைத் தமிழாக்கும் முறைகளை விவரிக்க.

(அல்லது)

(ஆ) அறிவியல் சொற்களைத் தமிழாக்கும் முறைகளைச் சுட்டியுரைக்க.

15. (அ) தமிழில் வட்டெழுத்துப் பெறுமிடத்தைச் சான்றுகள் தந்து விளக்குக.

(அல்லது)

(ஆ) 'தொலைக்காட்சி தமிழ்' குறித்து நீவிர் கொண்டிருக்கும் கருத்துக்களை எழுதுக.

பகுதி இ — (3 × 10 = 30 மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுள் மூன்றனுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. தமிழ்மொழியில் காலந்தோறும் ஏற்பட்ட மாற்றங்களைக் கட்டுரைக்க.

17. தமிழில் நடைபெற்ற அகராதியியல் புரட்சியைச் சான்றுகளுடன் விளக்குக.

18. நன்னூல் பேசும் சார்பெழுத்துகளைச் சான்றுகளுடன் எடுத்துரைக்க.

19. தமிழக வட்டார வழக்குகளை நிலவியல் அடிப்படையில் விரித்துரைக்க.

20. அறிவியல் தமிழின் முக்கியத்துவத்தை நும் பாடப் பகுதி வழி ஆராய்க.

| D–7103 |
|---|

| Sub. Code |
|---|
| 10724 |

DISTANCE EDUCATION

B.Lit. (Tamil) DEGREE EXAMINATION, DECEMBER 2022.

Second Semester

திராவிடமொழிகளின் ஒப்பாய்வியல்

(CBCS 2018 – 19 Academic Year Onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 2 = 20 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

1. நீலகிரி மலைப் பகுதிகளில் பேசப்படும் திராவிட மொழிகள் இரண்டினைத் தருக?

2. தென்னிந்திய மொழிகளைத் திராவிட மொழிகள் என நிறுவியவர்?

3. திராவிட மொழிகளில் மக்களால் அதிகம் பேசப்படும் மொழி யாது?

4. ஆந்திர மக்கள் தமிழ் மொழியை எப்பெயரில் அழைப்பர்?

5. திராவிட மொழிகளுக்குரிய சிறப்பு மெய்யொலிகளைக் குறிப்பிடுக.

6. உயிரற்ற பொருட்களைப் பால் வேறுபாடு காட்டிப் பகுக்கும் மொழி எது?

7. 'நான்' என்னும் வடிவத்தைப் பேசிய இலக்கண நூல்?

8. தமிழில் வழங்கும் இறந்த கால இடைநிலைகளைக் கூறுக.

9. தமிழில் பயின்று வரும் பால் அறி கிளவிகள் எவை?

10. வினையின் பொருட்கூறுகளைக் குறிப்பிடுக.

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கு ஒருபக்க அளவில் விடை தருக.

11. (அ) இந்திய மொழிக் குடும்பங்கள் குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) திராவிட மொழிகளின் முப்பிரிவுகளைச் சுட்டியுரைக்க.

12. (அ) தென்திராவிட மொழிகளில் 'தமிழ்' பெறுமிடத்தை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) மூலத் திராவிட மொழியுடன் தமிழ்க் கொண்டிருக்கும் தொடர்பை விவரிக்க.

13. (அ) மொழிகளில் உயிர் குறுகி ஒலிக்கின்ற முறைமையை விளக்குக.

(அல்லது)

(ஆ) சொல்லாக்கம் என்பதைச் சான்றுகளுடன் விவரிக்க.

14. (அ) பெயர்ச்சொல்லின் பண்புகளையும் வகைகளைச் சுட்டியுரைக்க.

(அல்லது)

(ஆ) சுட்டு, வினாப் பெயர்களைச் சான்றுகள் காட்டி விளக்குக.

15. (அ) திராவிட மொழிகளில் பெயரெச்சம் பெறுமாற்றை எழுதுக.

(அல்லது)

(ஆ) சொற்றொடர் ஒழுங்கு அமையப்பெறுமாற்றை எடுத்துரைக்க.

பகுதி இ — (3 × 10 = 30 மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுள் மூன்றனுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. தமிழ்மொழியாய்வில் கால்டுவெலின் பங்களிப்பை விளக்கி வரைக.

17. தமிழ்மொழிக்கும் திராவிட மொழிகளுக்கும் உள்ள வேறுபாடுகளைப் பட்டியலிடுக.

18. திராவிட மொழிகளில் எண்ணுப்பெயர் அமைப்பினை விரித்துரைக்க.

19. வினைச்சொற்கள் காலங்காட்டு முறையை விரித்துரைக்க.

20. திராவிட மொழிகளில் பாலறி கிளவிகள் வழங்குமுறையைக் கட்டுரைக்க.

| D–7104 |
|---|

| Sub. Code |
|---|
| 10731 |

DISTANCE EDUCATION

B.Lit. (Tamil) DEGREE EXAMINATION, DECEMBER 2022.

Third Semester

சமய இலக்கியம்

(CBCS 2018 – 19 Academic Year Onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

1. "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" எனப் பாடியவர்?

2. மூவர் பாடிய தேவாரங்களைத் தொகுத்தளித்தவர் யார்?

3. திருஞானசம்பந்தரின் இயற்பெயரைத் தருக.

4. இராமேச்சுரம் இறைவியின் பெயரைத் தருக.

5. 'தென்னவன் பிரமராயன்' எனப் போற்றப்படும் சைவ சமயக் குரவர்?

6. குதம்பைச் சித்தர் – சிறு குறிப்பு வரைக.

7. 'சோணசைல மாலை'யில் எத்தனைப் பாடல்கள் உள்ளன?

8. மக்களின் பசிப் போக்க, 'தரும சாலை' அமைத்தவர்?

9. குணங்குடியாரின் சித்து வேலைக் கண்டு மக்களிட்டப் பெயர் யாது?

10. 'கிறித்துவக் கம்பர்' எனப் போற்றப்படுபவர்?

பகுதி ஆ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) திருமூலர் தன் பிறப்பின் காரணத்தை எடுத்துரைக்குமாற்றை எழுதுக.

(அல்லது)

(ஆ) ஆண்டாள் தன் தோழியரைத் துயில் எழுப்பும் தன்மையை விவரிக்க.

12. (அ) உலகியல் அச்சத்தை அப்பர் பெருமான் வெளிப்படுத்துமாற்றை எழுதுக.

(அல்லது)

(ஆ) நச்சுண்டு உயிர்களைக் காத்த இறைவனைச் சம்பந்தர் எங்ஙனம் பாடுகிறார்?

13. (அ) இறைவனைப் பிரிந்து துன்பப்பட்ட மாணிக்கவாசகரின் நிலையைச் சுட்டுக.

(அல்லது)

(ஆ) புறப்பூசை தேவையில்லை எனக் குதம்பைச் சித்தர் கூறக் காரணம் யாது?

14. (அ) சோணசைல மாலை உணர்த்தும் பேரின்ப நிலையைப் புலப்படுத்துக.

(அல்லது)

(ஆ) வள்ளலார் உரைக்கும் வாய்மையும் தூய்மையும் குறித்து எழுதுக.

15. (அ) பராபரத்தின் இயல்பையும் இயக்கத்தையும் குணங்குடியார் வழி வரைக.

(அல்லது)

(ஆ) பாவமன்னிப்புக் குறித்த எச்.ஏ.கிருஷ்ணப்பிள்ளையின் கருத்துக்களை எழுதுக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுள் <u>மூன்றனுக்குக் கட்டுரை வடிவில்</u> விடை தருக.

16. சிவப்பரம்பொருளின் இறையியல்புகளைத் திருமூலர் வழிப் புலப்படுத்துக.

17. கூட்டுவழிபாட்டின் சிறப்புகளைத் திருப்பாவைப் பேசுமாற்றை விவரிக்க.

18. இறைவனின் திருவிளையாடல்களைத் திருப்புத்தூர்ப் பதிகம் வழிக் கட்டுரைக்க.

19. அடியார்கள் உறவின் அவசியத்தை வள்ளலார் வலியுறுத்துமாற்றை விவரிக்க.

20. எச்.ஏ. கிருஷ்ணப்பிள்ளையின் வேண்டுதல்களை நும் பாடப் பகுதி வழிப் பேசுக.

---

| D–7105 |
|---|

| Sub. Code |
|---|
| 10732 |

DISTANCE EDUCATION

B.Lit. (Tamil) DEGREE EXAMINATION, DECEMBER 2022.

Third Semester

இலக்கணம் – அகப்பொருளும் யாப்பும்

(CBCS 2018 – 19 Academic Year Onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

1. ‘அகப்பொருள் விளக்கம்’ எந்நூலின் சார்பு நூல்?

2. பெருந்திணை – இலக்கணம் தருக.

3. ஐந்து நிலங்களுக்குரிய தெய்வங்களைச் சுட்டுக.

4. களவில் பகற்குறி, இரவுக்குறி நடைபெறும் இடங்களைத் தருக.

5. தலைவன் ஐயம் நீங்கித் துணிவு பெற உதவுவனவற்றில் இரண்டினைக் கூறுக.

6. பிரிவுழிக் கலங்கல் என்றால் என்ன?

7. கற்பில் நிகழும் பிரிவுகள் யாவை?

8. யாப்பருங்கலக்காரிகைக்கு முதலில் உரை தந்தவர்?

9. ‘வாயுறை வாழ்த்து’- விளக்கம் தருக.

10. ஆசிரியப்பாவில் மயங்கி வரும் அடிகளைக் குறிப்பிடுக.

பகுதி ஆ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) நம்பியகப்பொருள் நூல் அமைப்பை விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) அன்பின் ஐந்திணைக்களுக்குரிய முதல் பொருட்களைப் பட்டியலிடுக.

12. (அ) குறிஞ்சித்திணைக்குரிய கருப்பொருட்களைச் சுட்டியுரைக்க.

(அல்லது)

(ஆ) மடல் ஏறுதல், மடல் விலக்குதல் ஆகியவற்றை விளக்குக.

13. (அ) வரைவின் இலக்கணம் தந்து வரைவு மலிதலை விவரிக்க.

(அல்லது)

(ஆ) உணர்த்த உணரும் ஊடற்குரிய கிளவிகளை எடுத்துரைக்க.

14. (அ) 'அசை' கொள்ளும் முறைகளைச் சான்றுகளுடன் விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) முதற்றொடையின் வகைகளைச் சுட்டியுரைக்க.

15. (அ) வெண்பாவின் இலக்கணத்தைச் சான்றுகள் தந்து விவரிக்க.

(அல்லது)

(ஆ) செய்யுட்களில் ஏற்படும் ஆறுவகை குற்றங்களைப் புலப்படுத்துக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுள் மூன்றனுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. அகப்பொருள் பேசும் பிரிவின் வகைகளைச் சான்றுகளுடன் தொகுத்துரைக்க.

17. அகத்திணையில் வாயில்களின் முக்கியத்துவத்தை நிறுவுக.

18. கற்பொடு புணர்ந்த கௌவையின் வகைகளை விளக்கி வரைக.

19. அமிர்தசாகரர் விளக்கும் 'சீர்' குறித்த கருத்துக்களைத் தொகுத்துரைக்க.

20. கலிப்பாவின் உறுப்புகளைக் காரிகை பேசுமாற்றை ஆராய்க.

| D–7106 |
|---|

| Sub. Code |
|---|
| 10733 |

DISTANCE EDUCATION

B.Lit. (Tamil) DEGREE EXAMINATION, DECEMBER 2022.

Third Semester

தமிழிலக்கிய வரலாறு

(CBCS 2018 – 19 Academic Year Onwards)

Time : Three hours | Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

1. தமிழ்நாடு குறித்துப் பேசும் வடநூல்கள் இரண்டினைக் குறிப்பிடுக.

2. கீழடி – சிறுகுறிப்பு வரைக.

3. களப்பிரர் காலத்தில் தோன்றிய அற நூல்களின் எண்ணிக்கை?

4. இரட்டைக் காப்பியங்களின் பெயர்களைச் சுட்டுக.

5. முதலாழ்வார்கள் எனப் போற்றப்படுபவர்கள்?

6. பிள்ளைத்தமிழின் வகைகளை எழுதுக.

7. குணங்குடி மஸ்தான் யாருடைய பாடல்களின் ஈடுபாடு கொண்டிருந்தார்?

8. திருக்குறள் உரையாசிரியர்களில் இருவரைக் கூறுக.

9. பெரியார் நடத்திய இரண்டு இதழ்களைக் குறிப்பிடுக.

10. தமிழில் தோன்றிய முதல் மூன்று நாவல்கள் எவை?

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

11\. (அ) தமிழகத்தில் நடைபெற்ற அகழ்வாராய்ச்சிகளைச் சுருக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) ஐங்குறுநூற்றின் நூல் பகுப்பும் அமைப்பும் குறித்து விளக்குக.

12\. (அ) பழமொழி நானூற்றின் தனித்துவத்தைச் சுட்டியுரைக்க.

(அல்லது)

(ஆ) சீவக சிந்தாமணி காப்பியத்தின் தனித்தன்மைகளை விளக்கி வரைக.

13\. (அ) நாயன்மார்களின் தமிழ்ப் பற்றை நும் பாடப் பகுதியால் விவரிக்க.

(அல்லது)

(ஆ) பரணியின் தோற்றமும் வளர்ச்சியும் பற்றி எழுதுக.

14\. (அ) சிற்றிலக்கியத்தில் குற்றாலக்குறவஞ்சி பெறுமிடத்தைப் பாராட்டியுரைக்க.

(அல்லது)

(ஆ) வீரமாமுனிவர் – தமிழ்ப் பணிகளை எடுத்துரைக்க.

15\. (அ) தமிழில் புதுக்கவிதை தோன்றி வளர்ந்த வரலாற்றைச் சுருக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) வாலியின் திரைப்பாடல்களில் இலக்கியம் நயம் – ஆராய்க.

பகுதி இ — (3 × 10 = 30 மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுள் மூன்றனுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. ஆற்றுப்படை இலக்கியங்களின் வரலாற்றைத் தொகுத்துரைக்க.

17. திருக்குறளின் தனிச்சிறப்புகளை நும் பாடப் பகுதியால் சுட்டுரைக்க.

18. ஆழ்வார்களின் பக்திச் சிறப்பைச் சான்றுகளுடன் விளக்குக.

19. தமிழ்ச் சிறுகதை வளர்ச்சியில் இதழ்கள் ஆற்றிய பணிகளை ஆராய்க.

20. பாரதிதாசனின் தமிழ்ப் பற்றினை அவர்தம் கவிதைகளால் நிறுவுக.

———————

| D–7107 |
|---|

| Sub. Code |
|---|
| 10734 |

DISTANCE EDUCATION

B.Lit. (Tamil) DEGREE EXAMINATION, DECEMBER 2022.

Third Semester

காப்பிய இலக்கியம்

(CBCS 2018 – 19 Academic Year Onwards)

Time : Three hours                                        Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

1. சிலப்பதிகாரத்தின் வேறு பெயர்களைக் குறிப்பிடுக.

2. இளங்கோவடிகள் காலம் யாது?

3. கவுந்தி அடிகளின் சாவகச் சிந்தனை யாது?

4. சீவக சிந்தாமணியின் முதல் நூல்களைக் குறிப்பிடுக.

5. தேவர் பற்றிய பழமரபுக் கதை எழுந்ததற்கான காரணம் யாது?

6. சிந்தாமணி யாப்பமைப்பைக் குறிப்பிடுக.

7. கம்பர் பற்றி வழங்கும் பழந்தொடர்கள் இரண்டினையும் சுட்டுக.

8. கம்பருக்குப் பின் தமிழில் தோன்றிய இராமாயணங்கள் இரண்டினைச் சுட்டுக.

9. சேக்கிழாரின் இயற்பெயர் என்ன?

10. பெரியபுராணத்தின் மூல நூல்கள் இரண்டின் பெயரைத் தருக.

பகுதி ஆ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) மாடல மறையோன் மூலமாகத் தெரிய வரும் காப்பிய நிகழ்வுகள் யாவை?

(அல்லது)

(ஆ) கண்ணகி எவ்வாறு அருள்கடவுளாக ஆகிறாள்? விளக்குக.

12. (அ) சிலப்பதிகாரத்தில் அகநிலைக் கட்டமைப்புக் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) சிலப்பதிகாரத்தில் நம்பிக்கை - விளக்கி வரைக.

13. (அ) அயோத்தியா காண்டத்தின் பெயர்ப் பொருத்தத்தை விளக்குக.

(அல்லது)

(ஆ) ஊழ்வினை சிந்தாமணியில் இடம்பெறுமாற்றை சான்று தந்து விளக்குக.

14. (அ) இராமனைத் தழுவிக் கொள்ளும் தசரதன் நிலை குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) மந்தரை குறுக்கீடும் கைகேயின் நிலையும் விவரிக்க.

15. (அ) பரதனொடு சென்ற சேனைகள் குறித்தும் அதைக் கண்ட குகன் குறித்தும் விவரிக்க.

(அல்லது)

(ஆ) வீரமாமுனிவரது வாழ்வும் பணியும் விளக்குக.

பகுதி இ — (3 × 10 = 30 மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. சிலப்பதிகாரக் காப்பியத்தின் தனிச் சிறப்பாக நீவிர் கருதுவதைக் கட்டுரைக்க.

17. கம்பராமாயணம் மூலம் அறியப்பெறும் தமிழின் சிறப்புகளை எழுதுக.

18. கேமசரியார் இலம்பகத்தில் தேவர் கூறிய கருத்துத் திறத்தைக் கட்டுரைக்க.

19. தேம்பாவணி காப்பிய அமைப்புக் குறித்து விவரிக்க.

20. சீறாப்புராணம் மானுக்குப் பிணைநின்ற படலக் கருத்தினைப் புலப்படுத்துக.

| D–7108 |
|---|

| Sub. Code |
|---|
| 10741 |

DISTANCE EDUCATION

B.Lit. (Tamil) DEGREE EXAMINATION, DECEMBER 2022.

Fourth Semester

கவிதை இலக்கியம்

(CBCS 2018 – 19 Academic Year Onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 2 = 20 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

1. பாரதியார் பணியாற்றிய இதழ்கள் யாவை?
2. உதாரனன் எதைக் கண்டு கவிதை வடித்தான்?
3. மனோன்மணியம் எந்நூலின் தழுவல் நூல்?
4. ‘சுரதா’ என்பதன் விரிவாக்கம் யாது?
5. உமர்கய்யாமின் சோதிட அறிவை வெளிப்படுத்தும் நூல்?
6. ந. பிச்சமூர்த்தியின் கவிதைகளுக்குத் தூண்டுகோலாய் அமைந்தது எது?
7. கல்யாண்ஜி தனது சிறுகதைகளை எப்பெயரில் எழுதினார்?
8. காசி அனந்தனின் ‘வெற்றிவிழா’ கவிதை எதற்காகப் பாடப்பட்டது?
9. ‘நான்யார்’ என்ற கவிதையின் ஆசிரியர் யார்?
10. ‘ வணக்கம் வள்ளுவம்’ என்ற நூலுக்குக் கிடைத்த விருது எது?

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

11. (அ) துரியோதனன் சினம் எத்தன்மையது எனப் பாரதி பாடுகின்றார்?

(அல்லது)

(ஆ) மனோன்மணியம் சுந்தரனார் தமிழின் தன்மைகளாகப் பாடுவன யாவை?

12. (அ) கவிதைக்குக் கவிமணி அளிக்கும் விளக்கம் யாது?

(அல்லது)

(ஆ) சிக்கனம் என்பதற்குச் சுரதா காட்டும் உவமைகளை எடுத்தெழுதுக.

13. (அ) கண்ணதாசனின் கடலைப்போல் வெள்ளம் வரும் என்ற பாடலை விளக்குக.

(அல்லது)

(ஆ) கண்ணாடிச் சிறகுகள் கவிதை நயத்தைச் சுருக்கித் தருக.

14. (அ) அப்துல் ரகுமானின் என்செவியில் உன் சுவாசம் என எதனைப் பாடுகிறார்?

(அல்லது)

(ஆ) தெரியவில்லை எனப் பிச்சமூர்த்தி எவற்றைப் பாடுகின்றார்?

15. (அ) வைரமுத்து மரங்களை வெட்டாதீர் என ஏன் பாடுகின்றார்?

(அல்லது)

(ஆ) தமிழன்பனின் கவிதை புதிய வடிவக் கவிதைகள் குறித்து எழுதுக.

பகுதி இ — (3 × 10 = 30 மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்றனுக்கு விரிவாக விடை தருக.

16. புரட்சிக்கவி வழிப் பாரதிதாசன் வெளிப்படுத்தும் சமூகப் புரட்சிகளை ஆராய்க.

17. கவிமணியின் மொழிபெயர்ப்புத் திறனைச் சான்றுகளுடன் நிறுவுக.

18. 'தைப்பாவை' புலப்படுத்தும் தமிழர் பண்பாட்டை விவரித்தெழுதுக.

19. காசி அனந்தனின் கவிதைப் பொருண்மைகளும் வடிவங்களும் என்னும் தலைப்பில் கட்டுரை தருக.

20. கல்யாண்ஜியின் எழுத்துலகம் குறித்து விளக்கியுரைக்க.

| D–7109 |
|---|

| Sub. Code |
|---|
| 10742 |

DISTANCE EDUCATION

B.Lit. (Tamil) DEGREE EXAMINATION, DECEMBER 2022.

Fourth Semester

இலக்கணம் – புறப்பொருளும் – அணியிலக்கணமும்

(CBCS 2018 – 19 Academic Year Onwards)

Time : Three hours　　　　Maximum : 75 marks

பகுதி அ — (10 × 2 = 20 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

1. வெட்சிப் போரின் ‘உண்டாட்டு’ குறித்து எழுதுக.

2. கையறுநிலை – விளக்கம் தருக.

3. தலைமாராயம் என்றால் என்ன?

4. கோட்டையை வெல்ல நடைபெறும் போர் எத்திணைக்குரியது?

5. தும்பைத்திணை எத்தனைத் துறைகளைக் கொண்டுள்ளது?

6. வேளாண் வாகையின் சிறப்பைக் குறிப்பிடுக.

7. உவமை தோன்ற காரணமான மூவகை ஒப்புமைகள் எவை?

8. வஞ்சப் புகழ்ச்சி அணி என்பதை விளக்குக.

9. சிலேடை அணி - சிறு குறிப்பு வரைக.

10. “எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு”- இக்குறளில் அமைந்துள்ள அணி யாது?

பகுதி ஆ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) வெட்சித்திணையின் கொற்றவை நிலையைப் பற்றி எழுதுக.

(அல்லது)

(ஆ) நெடுமொழி கூறலின் முக்கியத்துவத்தை விளக்கி வரைக.

12. (அ) வாள்நிலை, குடைநிலை ஆகியனவற்றை விரித்துரைக்க.

(அல்லது)

(ஆ) மகட்பாற் காஞ்சியைச் சான்றுடன் விளக்குக.

13. (அ) உழிஞைப் போரில் பாசிநிலை, ஏணிநிலை பெறுமிடத்தைச் சுட்டுக.

(அல்லது)

(ஆ) போர்க் களப் பாசறைகளின் வகைகளைப் புலப்படுத்துக.

14. (அ) தன்மையணியின் வகைகளைச் சான்றுகளுடன் எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) அற்புதம், அதிசயம், ஒப்புடை கூட்டம் ஆகிய உவமைகளை விளக்குக.

15. (அ) தற்குறிப்பேற்ற அணியை இலக்கியச் சான்றுடன் சுட்டுக.

(அல்லது)

(ஆ) சுவை அணியின் இலக்கணத்தைச் சான்றுக் காட்டியுரைக்க.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுள் மூன்றனுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. புறப்பொருள் வெண்பாமாலை நூல் பகுப்பும் அமைப்பும் பற்றி விவரிக்க.

17. தும்பைப் போரின் தனியியல்புகளைச் சான்றுகள் காட்டி விளக்குக.

18. பாடாண்திணைப் பேசும் ஆற்றுபடை குறித்த செய்திகளைத் தொகுத்துரைக்க.

19. இலக்கியப் படைப்பில் உவமை அணி பெறும் முக்கியத்துவத்தை உணர்த்துக.

20. தண்டி பேசும் வாழ்த்தணி குறித்த செய்திகளை எடுத்துரைக்க.

| D–7110 |
|---|

| Sub. Code |
|---|
| 10743 |

DISTANCE EDUCATION

B.Lit. (Tamil) DEGREE EXAMINATION, DECEMBER 2022.

Fourth Semester

நாட்டுப்புறவியல்

(CBCS 2018 – 19 Academic Year Onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 2 = 20 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

1. நாட்டுப்புறவியல் – சொல் விளக்கம் தருக.

2. தமிழகத்தில் எங்கு முதன் முதலில் நாட்டுப்புறவியல் துறை ஆரம்பிக்கப்பட்டது?

3. ஒப்பாரிப்பாடலைச் சங்க இலக்கியங்கள் எங்ஙனம் குறிப்பிடுகின்றன?

4. 'பரமார்த்த குரு கதை' என்ற கதைத் தொகுதியின் ஆசிரியர்?

5. 'பிறை கவ்வி மலை நடக்கும்'- என்னும் விடுகதையை விடுவிக்க.

6. நல்லதங்காளுக்கு எத்தனை குழந்தைகள்?

7. கும்மியின் வகைகளைச் சுட்டுக.

8. பெண் தெய்வங்களுக்கு எடுக்கப்படும் கரத்திற்கான பெயர்?

9. கச்சம் என்றால் என்ன?

10. கள்ளழகர் எந்த ஆற்றில் இறங்குகிறார்?

பகுதி ஆ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) தமிழக நாட்டுப்புறவியல் வரலாற்றைச் சுருக்கி வரைக.

(அல்லது)

(ஆ) நாட்டுப்புறப்பாடல்கள் பெரும் முக்கியத்துவத்தைப் புலப்படுத்துக.

12. (அ) தமிழ் இலக்கியங்களில் காணலாகும் நாட்டுப்புறவியல் கூறுகளைப் புலப்படுத்துக.

(அல்லது)

(ஆ) விடுகதையின் வகைகளைச் சான்றுகளுடன் விளக்குக.

13. (அ) நாட்டுப்புறக் கதைகளை வகைப்படுத்திக் காட்டுக.

(அல்லது)

(ஆ) கோலாட்ட அமைப்பு முறையை விளக்கி வரைக.

14. (அ) கனவு குறித்த மக்களின் நம்பிக்கைகளை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) ஜல்லிக்கட்டு வரலாற்றைச் சான்றுகளுடன் எழுதுக.

15. (அ) பெண்கள் சார்ந்த சடங்குகளைத் தொகுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) நாட்டுப்புற இலக்கியங்களில் காணலாகும் அணி நயத்தை விவரிக்க.

பகுதி இ — (3 × 10 = 30 மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுள் மூன்றனுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. நாட்டுப்புற இலக்கிய வகைகளைச் சான்றுகளுடன் கட்டுரைக்க.

17. நாட்டுப்புறக் கலைகளின் தற்கால நிலையை மதிப்பிடுக.

18. நாட்டுப்புற உணவுமுறைகளைச் சான்றுகளுடன் விவரிக்க.

19. முத்துப்பட்டன் கதைப்பாடல் உணர்த்தும் சமூக மாற்றத்தைப் புலப்படுத்துக.

20. நாட்டுப்புற ஆய்வின் வளர்ச்சி நிலைகளை விரித்துரைக்க.

| D–7111 |
|---|

| Sub. Code |
|---|
| 10744 |

DISTANCE EDUCATION

B.Lit. (Tamil) DEGREE EXAMINATION, DECEMBER 2022.

Fourth Semester

இதழியல்

(CBCS 2018 – 19 Academic Year Onwards)

Time : Three hours                    Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

1. உலக இதழியலின் தந்தை எனப் போற்றப்படுபவர் யார்?

2. இந்தியாவில் முதன் முதலில் வெளிவந்த இதழ் யாது?

3. குற்றச் செய்தி மூலங்களைக் குறிப்பிடுக.

4. வாய்ப்பூட்டுச் சட்டம் – விளக்குக.

5. இதழியலில் 'Cover Story' என்ற சொல்லின் முக்கியத்துவம் யாது?

6. பூரண மதுவிலக்கைச் சிறப்பு நோக்கமாகக் கொண்டு செயல்பட்ட இதழ் எது?

7. கேவிட்-19 என்னும் தீநுண்மி சீனாவின் எந்த நகரில் கண்டுபிடிக்கப்பட்டது?

8. இதழியலில் புழங்கும் PM என்ற சுருக்கக் குறியீட்டின் தமிழ் வடிவம் யாது?

9. இந்தியாவில் அதிகம் கேட்கப்படும் வானொலி ஒலிப்பரப்பு?

10. விளம்பரம் – சொல் விளக்கம் தருக.

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) இந்தியாவில் இதழ்களின் வளர்ச்சி வரலாற்றை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) இதழ்கள் மேற்கொள்ளும் பணிகளை வகைப்படுத்தி விளக்குக.

12. (அ) இதழ்களின் குறிக்கோள்களும் நோக்கங்களும் குறித்து விவரிக்க.

(அல்லது)

(ஆ) உள்ளடக்க அடிப்படையில் தமிழ் இதழ்களை வகைப்படுத்துக.

13. (அ) செய்தித் தொலைக்காட்சிகளின் வளர்ச்சியைச் சான்றுகளுடன் சுட்டுக.

(அல்லது)

(ஆ) செய்தியாளர்களுக்குரிய பண்புகளை நும் பாடப் பகுதியால் விளக்குக.

14. (அ) பத்திரிக்கை சுதந்திரத்திற்குத் தடைகளாக இருப்பனவற்றை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) படத் துணுக்குகள், நகைச்சுவைத் துணுக்குகள் ஆகியவற்றை விளக்கி வரைக.

15. (அ) பேட்டிகளால் ஏற்படும் நன்மைகளைத் தொகுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) இணையவழி இதழ்களின் பெருக்கத்தைக் காரணங்களுடன் விளக்குக.

பகுதி இ — (3 × 10 = 30 மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுள் மூன்றனுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. செய்தித்தாள் நிர்வாக அமைப்பை வரிப்படம் வழி விளக்கிக் காட்டுக.

17. சமூக ஊடகங்களின் பெருக்கத்தால் ஏற்பட்டுள்ள மாற்றங்களை விளக்கிடுக.

18. செய்திகளின் வகைகளைச் சான்றுகளுடன் விளக்கி வரைக.

19. இதழ்களில் விளம்பரங்கள் பெறும் முக்கியத்துவத்தை எடுத்துரைக்க.

20. இதழ்களில் தலையங்கம் பெறுமிடத்தைக் கட்டுரைக்க.

| D–7112 |
|---|

| Sub. Code |
|---|
| 10751 |

DISTANCE EDUCATION

B.Lit. (Tamil) DEGREE EXAMINATION, DECEMBER 2022.

Fifth Semester

பண்டைய இலக்கியம்

(CBCS 2018 – 19 Academic Year Onwards)

Time : Three hours                    Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

1. கூதிர்ப் பருவத்தில் பயன்படாத பொருள்கள் எவை?

2. இரண்டாம் பத்தைப் பாடியதற்காகக் குமட்டூர்க் கண்ணனார் பெற்ற பரிசைக் கூறுக.

3. மறம் வீங்கு புகழ் என்றால் என்ன?

4. ஐந்திணை அமைப்பில் அமைந்துள்ள பண்டைய இலக்கியங்களைக் கூறுக.

5. பரிபாடலில் இடம்பெற்றுள்ள பேரெண்கள் எவை?

6. உடன்போக்கு என்றால் என்ன?

7. புறநானூற்றில் பாடப்பட்டுள்ள பாட்டுடைத் தலைவர்களைக் கூறுக.

8. பகற்குறி, இரவுக்குறி என்பவற்றை விளக்குக.

9. திருக்குறளை உலகப் பொதுநூல் - குறிப்பு வரைக.

10. இன்பம் தருவது எது என்று வள்ளுவர் கூறுகிறார்?

பகுதி ஆ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) பரிசில் நீட்டித்தானை ஆலூர் மூலங்கிழார் எங்ஙனம் வாழ்த்துகின்றார்?

(அல்லது)

(ஆ) கார்காலம் கண்டு தலைவி வருந்துவதை கந்தரத்தனார் பாடல்கள் வழி விவரிக்க.

12. (அ) மழைபெய்தமையால் கோவலர் அடைந்த துன்பத்தினைக் கூறுக.

(அல்லது)

(ஆ) பதிற்றுப்பத்து - நூல் அமைப்பை விவரிக்க.

13. (அ) மாலைக்காலத்தை நல்லந்துவனார் விவரிக்குமாற்றை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) உடன்போக்கில் நிகழ்ந்த நிகழ்வுகளை ஐங்குறுநூற்றின் வழி விவரிக்க.

14. (அ) திருவள்ளுவர் பற்றிய செய்திகளைத் தொகுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) மானம் குறித்து வள்ளுவர் கூறுமாற்றை தெளிவுபடுத்துக.

15. (அ) நல்குரவு குறித்து விரிவாக எழுதுக.

(அல்லது)

(ஆ) உழவு குறித்து வள்ளுவர் கூறும் செய்திகளைத் தொகுத்துரைக்க.

பகுதி இ — (3 × 10 = 30 மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. ஆலூர் மூலங்கிழார் பாடிய பாடாண்திணைப் பாடல்களின் கருத்துக்களைத் தொகுத்துரைக்க.

17. இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனின் சிறப்புகளை விளக்கி வரைக.

18. நெய்தல் கலியில் கூறப்பட்டுள்ள தலைவி கூற்றுக்களை விரித்துரைக்க.

19. சான்றாண்மைக்குரிய குணங்களாக வள்ளுவர் கூறுவனவற்றைத் தொகுத்துரைக்க.

20. இன்றைய சமுதாயம் வளம்பெறும் கருத்துக்கள் திருக்குறளில் இடம்பெற்றுள்ளதை ஆராய்க.

| D–7113 |
|---|

| Sub. Code |
|---|
| 10752 |

DISTANCE EDUCATION

B.Lit. (Tamil) DEGREE EXAMINATION, DECEMBER 2022.

Fifth Semester

இலக்கணம் – தொல்காப்பியம் – எழுத்து – இளம்பூரணம்

(CBCS 2018 – 19 Academic Year Onwards)

Time : Three hours                                   Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடையளி

1. உட்பெறு புள்ளி உருவாகும் குறிப்பு வரைக.

2. மகரக்குறுக்கும் என்றால் என்ன?

3. 'தத்தம் திரிபே சிறிய என்ப' விளக்குக.

4. மூவகைத் திரிபுகள் யாவை?

5. எழுத்துச் சாரியைகள் எவை?

6. உடம்படுமெய் என்றால் என்ன?

7. 'யாவும் ஞாவும் வினையோர் அனைய' – எவ்விடத்தில்?

8. 'ஆண்மரக் கிளவி அரைமர இயற்றே' - விளக்குக.

9. தந்நிலை திரியா நான்கு சொற்கள் யாவை?

10. குற்றியலுகரம் - குறிப்பு வரைக.

பகுதி ஆ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடையளி.

11. (அ) நூன்மரபின் பெயர்க்காரணம் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) எழுத்துக்களின் வடிவம், இயக்கம் குறித்த தொல்காப்பியர் கருத்தை எழுதுக.

12. (அ) சார்பெழுத்துக்கள் குறித்த செய்திகளைப் புலப்படுத்துக.

(அல்லது)

(ஆ) போலி எழுத்துக்கள் குறித்துத் தொல்காப்பியர் சுட்டுவனவற்றை எழுதுக.

13. (அ) தொகை மரபின் பெயர்க்காரணத்தைச் சான்று தந்து விளக்குக.

(அல்லது)

(ஆ) இகர வீற்றுப் புணர்ச்சி விதிகளைக் குறிப்பிடுக.

14. (அ) ஐகார வீற்றுப் புணர்ச்சி விதிகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) இரண்டாம் வேற்றுமை திரிபு புணர்ச்சி விதிகளை எழுதுக.

15. (அ) திசைப்பெயர்முன் திசைப்பெயர்கள் புணருமாற்றை புலப்படுத்துக.

(அல்லது)

(ஆ) தொண்ணூறு, தொள்ளாயிரம் புணர்ச்சி விதிகளைக் கூறுக.

பகுதி இ — (3 × 10 = 30 மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடையளி.

16. மொழிக்கு முதலாகும், ஈறாகும் எழுத்துக்களை விவரித்தெழுதுக.

17. சாரியைகளையும் அவற்றின் திரிபுகளையும் பற்றி கட்டுரை வரைக.

18. அகர, ஆகார ஈற்றுச் சொற்களின் புணர்ச்சியைத் தொகுத்தெழுதுக.

19. மரப்பெயர்ப் புணர்ச்சிகளைத் தொகுத்தெழுதுக.

20. எண்ணுப்பெயர்கள் புணர்வதற்கான புணர்ச்சி விதிகள் குறித்துக் கட்டுரை வரைக.

———————

| D–7114 |
|---|

| Sub. Code |
|---|
| 10753 |

DISTANCE EDUCATION

B.Lit. (Tamil) DEGREE EXAMINATION, DECEMBER 2022.

Fifth Semester

ஊடகவியல்

(CBCS 2018 – 19 Academic Year Onwards)

Time : Three hours                    Maximum : 75 marks

பகுதி அ — (10 × 2 = 20 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

1. தகவல் தொடர்பியல் என்பதை விளக்குக.

2. தமிழில் வெளிவரும் சிறுவர் இதழ்கள் இரண்டினைக் குறிப்பிடுக.

3. ஜனசக்தி – சிறுகுறிப்பு வரைக.

4. செய்தியின் வடிவமைப்பைக் கூறுக.

5. 'விளம்பரம்' – குறிப்பு வரைக.

6. இந்திய அளவிலான செய்தி நிறுவனங்கள் இரண்டினைக் கூறுக.

7. 'மெட்ராஸ் கூரியர்'எவ்வாண்டு துவங்கப்பட்டது?

8. பாரதியார் பணியாற்றி இரண்டு இதழ்களைக் குறிப்பிடுக.

9. மின்னஞ்சலைக் கண்டுபிடித்த தமிழர்?

10. தமிழ் இணையக் கல்விக்கழகம் துவங்கப்பட்ட ஆண்டு?

பகுதி ஆ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கு <u>ஒரு பக்க அளவில்</u> விடை தருக.

11. (அ) ஊடகவியல் வரலாற்று வளர்ச்சியைச் சுருக்கி வரைக.

(அல்லது)

(ஆ) இதழ்களைச் சான்றுகளுடன் வகைப்படுத்துக.

12. (அ) செய்திகளின் வகைகளைச் சான்றுகள் காட்டி எழுதுக.

(அல்லது)

(ஆ) செய்தித்தாளின் விளையாட்டுச் செய்திகள் பெறுமிடத்தைச் சுட்டுக.

13. (அ) இதழ்களில் தலையங்கம் பெறும் முக்கியத்துவத்தை விவரிக்க.

(அல்லது)

(ஆ) தற்காலத்தில் இதழ்கள் எதிர்கொள்ளும் சவால்களை ஆராய்க.

14. (அ) ஊடகங்களைச் சான்றுகள் காட்டி வகைப்படுத்துக.

(அல்லது)

(ஆ) உலகத் தமிழ் வானொலிகள் குறித்துச் சுருக்கி வரைக.

15. (அ) தற்காலச் சூழலில் OTT தளங்களின் வளர்ச்சியை ஆராய்க.

(அல்லது)

(ஆ) இணையவழிக் கற்றல் செயல்பாடுகளைப் புலப்படுத்துக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுள் மூன்றனுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. தமிழில் வெளிவரும் மகளிர் இதழ்கள் குறித்துக் கட்டுரைக்க.

17. இந்திய பத்திரிகைச் சட்டங்கள் குறித்த கருத்துக்களைத் தொகுத்துரைக்க.

18. செய்தித் தொலைக்காட்சிகளின் வளர்ச்சியையும் நன்மைகளையும் விளக்குக.

19. வலைத்தளங்களில் விளையும் சமூக விழிப்புணர்வு கருத்துக்களை எழுதுக.

20. தமிழ் வளர்ச்சியில் மின்னிதழ்களின் பங்கைக் கட்டுரைக்க.

| D–7115 |
|---|

| Sub. Code |
|---|
| 10754 |

DISTANCE EDUCATION

B.Lit. (Tamil) DEGREE EXAMINATION, DECEMBER 2022.

Fifth Semester

இலக்கணம் : தொல்காப்பியம் சொல் – சேனாவரையம்

(CBCS 2018 – 19 Academic Year Onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடையளி.

1. பலர்பாலை உணர்த்தும் ஈறுகள் யாவை?

2. இரட்டைக் கிளவி என்றால் என்ன?

3. வேற்றுமை எத்தனை வகைப்படும்?

4. தற்கிழமை, பிறதின் கிழமைக்குரிய வேற்றுமை யாவை?

5. பிண்டப்பெயர் என்றால் என்ன?

6. னகர ஈற்றில் வரும் விளியேற்கா பெயர்களை எழுதுக.

7. மகடூஉ மருங்கின் பால்திரி கிளவி – விளக்குக.

8. 'உம்' என்னும் இடைச்சொல் உணர்த்தும் பொருள்கள் யாவை?

9. ஏகார இடைச்சொல்லுக்குரிய பொருள்கள் யாவை?

10. உகப்பு, உவப்பு என்னும் உரிச்சொற்களுக்குப் பொருள் தருக.

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடையளி.

11. (அ) வழுக்களின் வகைகளைச் சான்றுகளுடன் நிறுவுக.

(அல்லது)

(ஆ) பலபொருள் ஒருசொல் குறித்து எழுதுக.

12. (அ) இரண்டாம் வேற்றுமையின் பாகுபாட்டை விளக்குக.

(அல்லது)

(ஆ) தொல்காப்பியர் கூறும் உயர்திணைப் பெயர்களை விவரிக்க.

13. (அ) வினையெச்ச வாய்பாடுகளை விரித்தெழுதுக.

(அல்லது)

(ஆ) ஏகார இடைச்சொல் உணர்த்தும் பொருள் எவை?

14. (அ) 'கடி' என்னும் உரிச்சொல் உணர்த்தும் பொருள்கள் யாவை?

(அல்லது)

(ஆ) உரிச்சொல்லின் பொருள் அறியும் முறையை விளக்குக.

15. (அ) எச்சவியல் உணர்த்தும் பொருள்கோள் இரண்டினை விளக்கி வரைக.

(அல்லது)

(ஆ) பண்பின் அடிப்படையில் பிறக்கும் உரிச்சொற்கள் யாவை?

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடையளி.

16. திணை, பால் வழுவமைதிகளைத் தொகுத்தெழுதுக.

17. பொருள் மயக்கம் குறித்துக் கட்டுரை வரைக.

18. தொல்காப்பியரின் விரவுப்பெயர்ப் பாகுபாட்டைச் சான்றுடன் விளக்குக.

19. இடைச்சொல்லின் பொதுவிலக்கணத்அதையும் அதன் வகைகளையும் விளக்குக.

20. எச்சவியல் கூறும் தொகைச் சொற்களின் வகைகளைத் தொகுத்துரைக்க.

| D–7116 |
|---|

| Sub. Code |
|---|
| 10761 |

DISTANCE EDUCATION

B.Lit. (Tamil) DEGREE EXAMINATION, DECEMBER 2022.

Sixth Semester

ஒப்பிலக்கியம்

(CBCS 2018 – 19 Academic Year Onwards)

Time : Three hours　　　　　　　　Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

1. தேசிய இலக்கியம் – சிறுகுறிப்பு வரைக.

2. ஒப்பிலக்கியத்தின் மாற்று உருவங்களைத் தருக.

3. மொழிபெயர்ப்பு – வரையறுக்க.

4. தழுவல் என்றால் என்ன?

5. தாக்கக் கோட்பாடு என்பதைச் சுட்டுக.

6. தமிழ் மொழிபெயர்ப்பு முன்னோடிகள் இருவரைக் கூறுக.

7. இலக்கிய ஒருமைப்பாடு – குறிப்பு வரைக.

8. படைப்பாக்க உளவியல் குறித்து எழுதுக.

9. குரவைக்கூத்தைச் சுட்டியுரைக்க.

10. திருமுறைகளில் பெரியபுராணத்தின் முறையைக் கூறுக.

பகுதி ஆ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) ஒப்பிலக்கியத்தின் பண்புகள் பற்றி விளக்குக.

(அல்லது)

(ஆ) ஒப்பிலக்கியம் குறித்த பிரெஞ்சுக் கோட்பாட்டினை விளக்குக.

12. (அ) வாய்மொழி இலக்கியத்தின் வளர்ச்சியினைக் காட்டுக.

(அல்லது)

(ஆ) ஆநிரை கவர்தல் பற்றிய இலக்கியச் செய்திகளைப் புலப்படுத்துக.

13. (அ) சிற்றிலக்கியம், பேரிலக்கியத்திற்கான வேறுபாடுகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) இந்தியாவில் புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும் பற்றி எழுதுக.

14. (அ) பாரதி வால்ட்விட்மன் இலக்கிய உறவினை எடுத்து இயம்புக.

(அல்லது)

(ஆ) ஒப்பிலக்கியத்தின் இன்றியமையாமையைப் புலப்படுத்துக.

15. (அ) அகப்பொருள் இலக்கியத்தின் தனித்தன்மைகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) ஒப்பிலக்கியத்தின் ஆய்வுப் பரப்புப் பற்றி எழுதுக.

பகுதி இ — (3 × 10 = 30 மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுள் மூன்றனுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. ஒப்பிலக்கியத்தின் தோற்றம் மற்றும் வளர்ச்சி குறித்து விவரிக்க.

17. மொழிபெயர்ப்பாளர்க்குரிய அடிப்படைத் தகுதிகள் பற்றி விளக்குக.

18. தமிழ் இலக்கியத்தில் இசை குறித்த செய்திகளைக் கட்டுரைக்க.

19. அறநெறி அணுகுமுறையின் வரலாற்றினை விவரிக்க.

20. இந்திய தேசிய இலக்கியம் என்ற பொருளில் கட்டுரை எழுதுக.

| D–7117 |
|---|

| Sub. Code |
|---|
| 10762 |

DISTANCE EDUCATION

B.Lit. DEGREE EXAMINATION, DECEMBER 2022.

Sixth Semester

Tamil

இலக்கணம் – தொல்காப்பியம் – பொருள் – இளம்பூரணம்

(CBCS 2018 – 19 Academic Year Onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 2 = 20 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

1. அகத்திணையின் முப்பொருளைக் கூறுக.

2. கைக்கிளை–சிறுகுறிப்பு வரைக.

3. மருதத்திற்குரிய சிறுபொழுதுகளைத் தருக.

4. உழிஞை போர் எதன்பொருட்டு நடைபெற்றது?

5. வாகையின் வரையறைகளைச் சுட்டுக.

6. கற்பிற்குரிய பிரிவுகளைக் குறிப்பிடுக.

7. உவமைத் தோன்றும் களங்களை எழுதுக.

8. மெய்ப்பாடுகளின் வகைகளைக் கூறுக.

9. தொல்காப்பியம் சுட்டும் அம்மை என்பது யாது?

10. மரபியல் குறிப்பிடும் ஓரறிவு உயிர்களைக் கூறுக.

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

11\. (அ) களவு காலப் பிரிவு வகைகள் குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) உடன்போக்கில் நற்றாய்க்குரிய கூற்றுகளை நிரல்படுத்துக.

12\. (அ) தொல்காப்பியர் விவரிக்கும் வெட்சிப்போர் குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) மறையோர் தேயத்து மன்றல் எட்டாவன யாவை? விளக்குக.

13\. (அ) கற்பில் தலைவிக்குரிய கூற்றுகளைப் புலப்படுத்துக.

(அல்லது)

(ஆ) காட்டலாகாப் பொருள்கள் குறித்து எழுதுக.

14\. (அ) அகத்திற்கும் புறத்திற்கும் பொதுவான மெய்ப்பாடுகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) தொல்காப்பியரின் அசைக்கோட்பாடு குறித்து எழுதுக.

15\. (அ) செய்யுளியல் உரைக்கும் வண்ணத்தின் வகைகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) மரபியல் சுட்டும் நூல் வகைகளைக் கட்டுரைக்க.

பகுதி இ — (3 × 10 = 30 மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுள் மூன்றனுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. வாகைத்திணையின் வகைகளையும் துறைகளையும் விவரிக்க.

17. களவில் தோழியின் பங்கும் பணியும் குறித்து விரித்தெழுதுக.

18. தொல்காப்பியர் கூறும் உவமை வகைகளைத் தொகுத்தெழுதுக.

19. தொல்காப்பியர் சீர் குறித்துக் கூறும் இலக்கணத்தைப் புலப்படுத்துக.

20. உயிர்பாகுபாடு குறித்து மரபியல் கூறுவனவற்றை விரித்தெழுதுக.

| D–7118 |
|---|

| Sub. Code |
|---|
| 10763 |

DISTANCE EDUCATION

B.Lit. (Tamil) DEGREE EXAMINATION, DECEMBER 2022.

Sixth Semester

தமிழ்

நாடகத் தமிழ்

(CBCS 2018 – 19 Academic Year Onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 2 = 20 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

1. ஆடவல்லானின் ஆட்டத்தில் நாடகம் பிறக்கிறது என்பதற்குச் சான்றாக விளங்கும் நூல் எது?

2. செய்யுள் நாடகங்கள் நான்கினைக் கூறுக.

3. பேரறிஞர் அண்ணா எழுதிய ஓரங்க நாடகங்களைக் குறிப்பிடுக.

4. வரலாற்று நாடகங்களின் வகைகளைக் கூறுக.

5. சுழல் அரங்க அமைப்பு என்றால் என்ன?

6. முதல் முதலில் நாடகங்களை உரைநடையில் எழுதியவர் யார்?

7. ஔவை சண்முகம் பெற்ற விருதுகளை எழுதுக.

8. நடிகர் எஸ்.எஸ். விஸ்வநாததாஸ் சிறைச்செல்ல காரணமான பாடல்கள் எவை?

9. நாடக நடிகர்களுக்குக் கலைவாணர் செய்த தொண்டினைக் கூறுக.

10. வடமொழியில் நாடகக் கலைக்கு விளக்கம் தரும் நூல் எது?

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) பள்ளு நாடகங்கள் பற்றிக் குறிப்பிடுக.

(அல்லது)

(ஆ) வீதி நாடகங்களின் தோற்றத்தை விளக்குக.

12. (அ) ஓரங்க நாடகங்கள் பற்றி விவரிக்க.

(அல்லது)

(ஆ) 'அபிமன்யு சுந்தரி' நாடகத்தின் கதைச் சுருக்கத்தினைக் கூறுக.

13. (அ) நாடக அரங்குகள் பற்றி விவரிக்க.

(அல்லது)

(ஆ) களரி பற்றி விளக்கி வரைக.

14. (அ) நாடகத்தில் நடிகர் திலகத்தின் நடிப்புக் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) பாலாமணி அம்மாவின் நாடகப் பணியை விளக்குக.

15. (அ) நாடகத்தில் புரட்சி செய்த எம்.ஆர். ராதா பற்றி விவரிக்க.

(அல்லது)

(ஆ) ஷேக்ஸ்பியர் நாடகங்களைப் புலப்படுத்துக.

பகுதி இ — (3 × 10 = 30 மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. சங்க காலக் கூத்துக்கள் குறித்து விவரிக்க.

17. வரலாற்று நாடகங்கள் பற்றி கட்டுரை வரைக.

18. ஆண் நாடகக் கலைஞர்களின் நாடகப் பணிகளை விளக்குக.

19. பி.யு. சின்னப்பா நாடகத்திற்கு ஆற்றிய பணிகளை விரிவாக எழுதுக.

20. தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட நாடகங்கள் குறித்து எடுத்துரைக்க.

| D–7119 |
|---|

| Sub. Code |
|---|
| 10764 |

DISTANCE EDUCATION

B.Lit. (Tamil) DEGREE EXAMINATION, DECEMBER 2022.

Sixth Semester

விளம்பரக்கலை

(CBCS 2018 – 19 Academic Year Onwards)

Time : Three hours                    Maximum : 75 marks

பகுதி அ — (10 × 2 = 20 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

1. ‘சந்தையியலின் குரல்’ என்பது யாது?

2. இந்தியாவில் முதல் விளம்பரம் எவ்விதழில் வெளியானது?

3. இந்திய ஒன்றிய அரசின் விளம்பர இயக்குநரகத்தைச் சுட்டுக.

4. விளம்பரங்கள் வெளியாகும் ஊடகங்கள் இரண்டினைக் கூறுக.

5. ‘உள்மனைச் சாதனம்’ என அழைக்கப்படும் சாதனம் யாது?

6. தடை செய்யப்பட்ட விளம்பரங்களுக்குச் சான்றுகள் தருக.

7. ஊடக விளம்பரங்களில் விழிப்புணர்வு வாசகங்கள் இடம்பெறும் பொருட்களை எழுதுக.

8. இந்திய விளம்பர நிறுவனங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.

9. ‘அசோக் ஜெயின்’ விருது எத்துறையினருக்கு வழங்கப்படுகிறது?

10. விளம்பர உத்திகள் நான்கினைக் குறிப்பிடுக.

பகுதி ஆ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) விளம்பரத்தின் நோக்கங்களை விளக்கி வரைக.

(அல்லது)

(ஆ) விளம்பரம் மேற்கொள்ள முடிவு செய்யும் கூறுகளை விளக்குக.

12. (அ) செய்தித்தாள் விளம்பரங்களால் விளையும் நன்மைகளை விவரிக்க.

(அல்லது)

(ஆ) காட்சிப் பரப்பு இயக்குநரகத்தின் பணிகளைப் புலப்படுத்துக.

13. (அ) தொலைக்காட்சி விளம்பரத்தின் குறைகளை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) வானொலி விளம்பரங்களின் தனித்தன்மைகளை விவரிக்க.

14. (அ) அரசு விளம்பரங்களால் ஏற்படும் விழிப்புணர்வுகளைச் சுட்டியுரைக்க.

(அல்லது)

(ஆ) விளம்பரம் செய்யப்படும் நேர வரையறைகளைச் சான்றுடன் விளக்குக.

15. (அ) தொலைபேசி அழைப்பு விளம்பரங்களின் தீமைகளை விவரித்தெழுதுக.

(அல்லது)

(ஆ) விளம்பர நடிகர்களின் பொறுப்புகளைச் சான்றுகளுடன் விவரிக்க.

பகுதி இ — (3 × 10 = 30 மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுள் மூன்றனுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. விளம்பரத்தின் வகைகளைச் சான்றுகளுடன் கட்டுரைக்க.

17. விளம்பர ஒழுக்க நெறிகளை நும் பாடப் பகுதி வழி எடுத்துரைக்க.

18. விளம்பரத்தில் பெண்கள் இடம்பெறுமாற்றை ஆராய்க.

19. தற்காலத் திரையரங்க விளம்பரங்கள் குறித்த கருத்துகளை விவரிக்க.

20. தேர்தல் கால விளம்பர விதிகள் குறித்துக் கட்டுரைக்க.

———————